| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>கோமதி | அ.வ.எண். 149/2018 | 19.12.2024 |

<u>குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடம் எனக்கு சொந்தமானது என விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றும், உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு தமிழ் படிக்க தெரியுமா என்றால் படிக்க தெரியும், கண்ணாடி இல்லாததால் தற்போது படிக்க இயலாது. சுவர் உடன்படிக்கை பத்திரத்தில் சுவர் முழுவதும் வேலாயுதம் பெயரில் உள்ளதால் ரெங்கசாமிக்கு சுவற்றில் ஒட்டி கட்டிக்கொள்ளவும், சுவரில் கொக்கி கல் வைக்கவும் தான் பாத்தியம் உள்ளது என்றும், சுவற்றில் உரிமையில்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. ரெங்கசாமிக்கு தன் காலி மனையில் முன்புறம் கெட்டிமெத்தை வீடு கட்ட வேண்டி இருந்தது என்றும், அவருக்கு சொந்தமான மனையில் கீழ்புறம் சந்து போட்டு, மேல்புறம் தனது அத்தில் ரெங்கசாமிக்கு சுவர் எடுத்தால் கிழமேல் அகலம் போதாமல் உத்தேசித்து நாம் இரண்டு பேர் சௌகரியத்தையும் உத்தேசித்து சாட்சிகள் முன்னிலையில் உடன்படிக்கை ஏற்படுத்தி கொண்டதாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது வீட்டிற்கு கீழ்புறம் உள்ள சுவர் அதற்கு பின்னால் உள்ள காலியிடம் ஆகியவை பிரதிவாதிகள் இடம் உள்ளது என்றால் சரியல்ல, சுவற்றுக்கு பின்னால் உள்ள காலியிடம் எங்களுக்கு உள்ளது. பிரதிவாதிகளுக்கு சொந்தமான இடத்தில் 1ம் பிரதிவாதி சுவற்றை ஒட்டி வீடு கட்டியுள்ளார்.

2ம் பிரதிவாதி சுவற்றை ஒட்டி 1 அடி இடம்விட்டு வீடு கட்டியுள்ளார். மேற்படி சுவர் 1ம் பிரதிவாதியின் சொந்த இடம் என்றும், அதனால் தான் சுவற்றை ஒட்டி கட்டியுள்ளார் என்றும், எனக்கு அந்த சுவற்றில் கொக்கி கல் வைக்க மட்டுமே உரிமையுள்ளது என்றும், சுவற்றில் உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் வழக்கில் விளம்புகை பரிகாரம் கோராமல், உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. சுவர் என்னுடைய சொத்தாக இருந்திருந்தால் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றும், அதனால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் சரியல்ல.